# <u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>
# <u>OS No: 177/2018</u>

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ம் நாள் Pw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | ராதா கிருஷ்ணன் |
| த.க.பெயர் | ராமசாமி |
| கிராமம் | பெருந்துறை |
| மாவட்டம் | ஈரோடு |
| வயது | 59 |

<u>வா.சா.2 நாள் 03.09.2025</u>

**<u>முதல் விசாரணை:</u>** (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)

நான் வாதி தரப்பு சாட்சி. என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும். கே எஸ் சண்முக சாமி என்பவர் 13.02.2012 ல் ஒரு உயில் ஆவணத்தை ஏற்படுத்தினார். அதில் நானும் செங்கோட்டையனும் சாட்சி கையொப்பம் செய்தோம். உயில் ஆவணத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

<u>குறுக்கு விசாரணை (2, 3 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

சண்முக சாமியை எனக்கு 15 ஆண்டுகளாக தெரியும். சண்முக சாமி யாருக்கு உயில் ஆவணத்தை ஏற்படுத்தினார் என்றால் திவ்யா என்பவருக்கு எழுதியுள்ளார். திவ்யா மற்றும் சண்முக சாமிக்கு என்ன உறவு முறை என்றால் சண்முக சாமி திவ்யாவின் சித்தப்பா உறவு முறை. உயில் ஆவணம் 13.02.2012 ல் எழுதப்பட்டது. உயில் ஆவணம் எந்த சொத்திற்கு எழுதப்பட்டது என்றால் பணிக்கம்பாளையத்தில் உள்ள சொத்திற்கு எழுதப்பட்டது. உயில் ஆவணத்தில் நானும் ஒரு சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். உயில் ஆவணம்

எழுதும்போது  சண்முக சாமி, நான் , செங்கோட்டையன் மற்றும் ராஜா ஆகியோர் இருந்தோம். உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை, நோட்ரி வழக்கறிஞர் முன்பு பதிவு செய்யப்பட்டது. உயில் ஆவணம் ஏற்படுத்தி சுமார் 3 மாதம் கழித்து சண்முக சாமி இறந்து விட்டார். சண்முக சாமிக்கு திருமணம் ஆகவில்லை. சண்முக சாமிக்கு நேரடியாக வாரிசு எவரும் இல்லை. உயில் ஆவணம் திவ்யாவிடம் எவ்வாறு சென்றது என்றால் நான் தான் திவ்யாவிடம் கொடுத்தேன்.

குறுக்கு விசாரணை (1 ம் பிரதிவாதி தரப்பில் பிரதிநிதித்துவம் இல்லை. எனவே குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது)

மறு விசாரணை இல்லை.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED  Digitally signed by M ASHFAQ AHAMED

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS